# பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(29.06.2016 முதல் 03.07.2016 வரை)

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை– 612 101

போன்: 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in Fax: 0435 2472881


தேதி:28.06.16

## கடந்த 4 நாட்களில் நிலவிய வானிலை (24.06.2016– 27.06.2016)

| காரணிகள் | கடந்த நாட்களில் வானிலை |
|---|---|
| மழை (மி.மீ.) | 8.6 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 30 – 36 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 24 – 28 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 6 – 7 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 43 – 72 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 20 – 27 |

## அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1 29.06.2016 | நாள் 2 30.06.2016 | நாள் 3 01.07.2016 | நாள் 4 02.07.2016 | நாள் 5 03.07.2016 |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 36 | 36 | 36 | 36 | 36 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 27 | 27 | 27 | 27 | 27 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 6 | 6 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 48 – 60 | 48 – 60 | 48 – 60 | 48 – 60 | 48 – 60 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 21 | 21 | 21 | 21 | 21 |
| காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

29.06.2016 முதல் 03.07.2016 வரை வானம் மேகமூட்டத்துடன் இருள்சூழ்ந்து காணப்படும். மழை இல்லை.

***வேளாண் அறிவுரைகள் :***

**பயிர் : நெல், உளுந்து, எள், கரும்பு மற்றும் பருத்தி**

**நெல் தரிசு பருத்தி: பூக்கும் பருவம். நெல் : நாற்றங்கால் தயார்செய்தல்**

- நெல் நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு அடியுரமாக 200 கிலோ ஜிப்சம் இடவேண்டும். மேலும், மணிச்சத்திற்கு 125 கிலோ சூப்பர் பாஸ்பேட், அடியுரமாக இடவேண்டும். தழைச்சத்து மிகவும் குறைவாக இருக்கும் பட்சத்தில் ஒரு ஏக்கருக்கு 35 கிலோ யூரியா இடவேண்டும்.
- குறுவை நடவு செய்யும் பொழுது பதினெட்டு முதல் இருபத்தி இரண்டு நாட்கள் வயதுடைய நன்கு வாளிப்பான நாற்றுக்களைப் பெற்று உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் (1 கிலோ) மற்றும் பாஸ்போபாக்டீரியாவை (1 கிலோ) 40 லிட்டர் தண்ணீரில் இட்டு நாற்றுகளின் வேர் பாகம் கரைசலில் நன்கு நனையுமாறு 15 முதல் 30 நிமிடங்கள் வரை வைத்திருந்து பிறகு 20 x 10 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், 14 நாட்கள் வயதுடைய நாற்றை குத்துக்கு ஒரு நாற்று வீதம் 25 x 25 செ.மீ. இடைவெளியில் சதுர முறை நடவு செய்ய வேண்டும்.
- நடவு செய்யப்பட்டுள்ள குறுவை நெற்பயிரில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த புரோபனோபாஸ் 50 இ.சி. 400 மி.லி./ஏக்கர் அல்லது 50 சதம் நனையும் கந்தகதூள் 400 கிராம்/ஏக்கர் அல்லது டைக்கோபால் 600 மி.லி./ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**இயக்குநர்**